**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.338/2022**

**<u>தேதி : 15.09.2025</u>**

**<u>(வா.சா.1) – திருமதி. விஜயலட்சுமி</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை :– (பிரதிவாதி தரப்பில்)</u>**

1. பிரதிவாதி என் உடன்பிறந்த சகோதரர் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் நடத்துநராக பணிபுரிந்து வருகிறார். அவர் சாமியார்புதூரில் குடியிருந்து வருகிறார். பிரதிவாதி என்னிடம் 21.06.2020 அன்று என்னிடம் கடன் வாங்கினார். ரூ.7,00,000/– கடன் வாங்கினார். என் வீட்டில் வைத்து சுமார் காலை 10.00 மணியளவில் கடன் வாங்கினார். நான் பணத்தை வாங்கியிலிருந்து எடுத்துக்கொடுத்தேனா என்றால் இல்லை. பணத்தை வீட்டில் வைத்திருந்தேன். பிரதிவாதி ஒரு மாதம் முன்பே என்னிடம் பணம் கேட்டிருந்தார். அந்த விபரத்தை நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிராதிலோ, என்னுடைய பிரமாண வாக்மூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

2. பிரதிவாதி என்னிடம் ஒரு மாதம் முன்பாக கேட்கவில்லை என்றும், மேற்படி விபரத்தை நான் என் வழக்கறிஞர் அறிவிப்பிலோ, வழக்குரையிலும் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு ஒரு மாதம் முன்பாக கேட்டிருந்தால் வழக்கறிஞர் அறிவிப்பிலும், வழக்குரையிலும் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி அவ்வாறு கடன் கேட்டிருந்தால் அவர் கடன் கேட்ட தேதி மற்றும் இடம் பற்றிய விபரங்களை வழக்குரையிலும், அறிவிப்பிலும் சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டில் ஒரு மாதம் முன்பாக அவர் பணம் கேட்டார் என்ற விபரத்தை குறிப்பிடவில்லை என்று சொன்னால் ஞாபகமில்லை.

3. நான் வேலன் விகாஸ் பள்ளியில் அக்கவுண்டன்டாக வேலை பார்க்கிறேன். நான் மாதம் ரூ.15,000/- சம்பாதிக்கிறேன். எனக்கு மாதம் குடும்பம் நடத்த சுமார் 10,000/- செலவாகும். நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. ரூ.20,000க்குமேல் பணம் கொடுத்தால் காசோலையாகவோ, வரைவோலையாகவோதான் கொடுக்கவேண்டும் என்று சட்டம் சொல்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கணவர் நடத்துனராக வேலை பார்க்கிறார். அவரது ஊதியத்தையும் என் ஊதியத்தையும் வைத்து பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். பிரதிவாதிக்கு கடன் கொடுத்த விபரம் என் கணவருக்கு தெரியும். என் கணவர் பெயர் தங்கவேல்.

4. என் கணவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் பழனி டெப்போவில் (C.T.C. திருப்பூர், பழனி கிளையில்) வேலை பார்க்கிறார். பிரதிவாதிக்கு நான் பணம் கொடுக்கும்போது என் கணவர் வீட்டில் இருந்தாரா என்றால் இருந்தார். என் கணவரின் பணத்தையும் சேர்த்து கடனாக கொடுத்திருக்கும் நிலையில் என் கணவரும் சேர்ந்து கடன் கொடுத்ததாக ஏன் கடனுறுதிச் சீட்டில் எழுதவில்லை என்று கேட்டால், குடும்பத்தின் வரவு செலவுகளை நான்தான் கவனித்து வருகிறேன். அதனால் நான் கடன் கொடுத்தேன்.

5. நான் வட்டி வரவு செலவு செய்வது வழக்கமா என்றால் இல்லை. கடனுறுதிச் சீட்டை யார் எழுதினார்கள் என்றால் தமிழரசு என்பவர் எழுதினார். சாட்சி கையெழுத்து தங்கவேல் மற்றும் ஜாபர் சாதிக் ஆகியோர் போட்டுள்ளனர். சாட்சிக் கையொப்பமிட்ட தங்கவேல் என் கணவர். கடனுறுதிச் சீட்டை பிரதிவாதி பிரபு வாங்கி வந்தார். பிரதிவாதி கடனறுதிச் சீட்டில் இரண்டு கையெழுத்துக்கள் போட்டார். எத்தனை மணிக்கு பிரதிவாதி கடனுறுதிச் சீட்டில் கையெழுத்து போட்டார் என்றால் 10.00மணிக்கு வந்தார், பேசிவிட்டு பணம் வாங்கிவிட்டு, அதன்பிறகு கையொப்பமிட்டார். பிரதிவாதியே சாட்சிகளை அழைத்து வந்தார்.

6. அப்போது என்னுடைய கணவர் என்னுடன் இல்லையா என்றால், என் கணவரைத்தவிர மற்றவர்களை அவர் அழைத்து வந்தார். பிரதிவாதி என்னிடம் கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுக்கவே இல்லை என்றும், பிரதிவாதி என்னிடம் கடன் எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. கடனுறுதிச் சீட்டை நான் என் கணவரையும், எங்களுக்கு வேண்டிய மற்றவர்களையும் வைத்து உற்பத்தி செய்ததாகச் சொன்னால் சரியல்ல. கடனுறுதிச் சீட்டில் முதலில் பிரதிவாதி பிரபு கையொப்பமிட்டார். தமிழரசு கடனுறுதிச் சீட்டை எழுதியபிறகு பிரதிவாதி கையொப்பம் செய்தார். அதன்பிறகு சாட்சிகள் கையொப்பம் செய்தார்கள். அதன்பிறகுதான் பணம் கொடுத்தேன்.

7. ஒருவரிடம் கடன் கொடுப்பது என்றால் பணத்தை கொடுத்து கடன் வாங்குபவர் அதனை சரிபார்த்த பின்புதான் கடனுறுதிச் சீட்டு எழுதப்படும் என்றும், அதன்று முன்பு கடனுறுதிச் சீட்டு எழுதப்பட்டதாகச் சொல்வது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. கடனுறுதிச் சீட்டில் முதல் சாட்சியாக தங்கவேல் கையொப்பம் செய்தார். அவருக்கு எழுதப்படிக்கத்தெரியும். தங்கவேல் கையொப்பம் மட்டும்தான் செய்தார். அவரது முழு விலாசத்தை தமிழரசு எழுதினார். இரண்டாவது சாட்சி கையொப்பம் ஜாபர் சாதிக் என்பவர் போட்டுள்ளார். அவர் கையொப்பம் மட்டும் செய்தார், அவர் விபரங்களை தமிழரசு எழுதினார். ஜாபர் சாதிக்கின் தகப்பனார் பெயர் எனக்கு ஞாபகமில்லை. கடனுறுதிச் சீட்டு எழுதியவரின் தகப்பனார் மற்றும் விலாசம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

8. கடனுறுதிச் சீட்டு சாட்சிகளான என் கணவர் தங்கவேல், ஜாபர் சாதிக் மற்றும் தமிழரசு ஆகியோர்களை ஒரே நாளில் விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். கடனுறுதிச் சீட்டை பிரதிவாதி எழுதிக்கொடுக்கவில்லை என்றும், நானே எனக்கு வேண்டியவர்களை வைத்து உற்பத்தி செய்துள்ளேன் என்றும், விலாச விபரங்கள் எழுதப்பட்டுள்ள கையெழுத்துக்களும், கடனுறுதிச் சீட்டு எழுதப்பட்டுள்ள கையெழுத்துக்களும் வெவ்வேறாக இருப்பதாகச் சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம்

நேரிலும், ஆட்கள் மூலமும் கடனைத் திருப்பிக் கேட்டதாகச் சொல்லும் விபரத்தில் எந்த தேதியில், எந்த இடத்தில், எந்த ஆட்கள் மூலம் கேட்டேன் என்ற விபரம் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9. எனக்கும் பிரதிவாதிக்கும் கடன் கொடுக்கல் வாங்கல் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் தீர்ப்புக்கு முன் ஜப்தி செய்துள்ள சொத்து என் தாயாருக்கு முதலில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் தாயார் இறந்தபின்பு அவரது சகோதரிகளான நாங்கள் மூவரும் பிரதிவாதிக்கு பாக பாத்திய விடுதலை ஆவணம்எழுதிக்கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான். நாங்கள் பாக பாத்திய விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்த பிறகு பிரதிவாதிதான் மேற்படி சொத்தை அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். பாக பாத்திய விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்த பின்பு பிரதிவாதியிடம் அந்த சொத்தை குறைந்த விலைக்குக்கேட்டு அவர் கொடுக்கவில்லை என்றும், அதனால் பிரதிவாதியிடம் சொத்தை மிரட்டி வாங்குவதற்காக இவ்வாறான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

10. பிரதிவாதியின் கையொப்பத்தை உற்பத்தி செய்து, இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி அரசு போக்குவரத்துக் கழகத்தில் மாதச் சம்பளம் பெறும் நிலையில் என்னிடம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. குடும்பச் செலவு மற்றும் கடன் பிரச்சனைக்காக பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கினார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கடன் பிரச்சனைக்காக கடன் வாங்குவதாக குறிப்பிடவில்லை. குடும்பச் செலவு என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதிக்கு ஊருக்குள் சிறுசிறு கடன் இருப்பதாகச் சொன்னார், யாரிடம் கடன் வாங்கினார் என்று சொல்லவில்லை.

11. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டில் அடித்தல் திருத்தல் ஏற்பட்டுள்ளது குறித்து கடனுறுதிச் சீட்டை எழுதியவர் குறிப்பு எதுவும் எழுதவில்லை என்று சொன்னால் சரிதான். கடனுறுதிச் சீட்டில் தமிழ்

வருடங்கள் எழுதப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியவில்லை. தாவாக் கடனுறுதிச் சீட்டு உண்மையானது அல்ல என்றும், அதில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல என்றும், பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :–** இல்லை.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2025.09.15 18:32:30 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.